சுண்டுக்குளி கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | கார்த்திகை 27 | ராபி அவ் 29 | இதழ் 305
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 12-12-1985

12ஃ

## யாழ். கோட்டையிலிருந்து கிளிநொச்சி இளைஞர்கள் 15 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டு யாழ். கோட்டை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டுப் பேர் விசாரணையின் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களின்
(5-ம் பக்கம் பார்க்க)

## அபயபுரம் உப்புவெளியில் நேரடி மோதல்!

(திருகோணமலை)
திருகோணமலைப் பகுதியிலுள்ள அபயபுரம் - உப்புவெளி பொலிசாருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நேரடியாக துப்பாக்கிச்சமர் நடந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே பகுதியில் மற்றுமொரு சம்பவத்தின் போது
(5-ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னை மாநில சுயாட்சி மூலம் தீர்வு நிச்சயம்! தஹா நம்பிக்கை

## ஈராக்கை உதாரணம் காட்டுகிறார்

(கொழும்பு)
''தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைக் கண்டிப்பாக வழங்கியே தீரவேண்டும். அவர்களும் இந்தநாட்டு மக்கள்தான். வடக்கு, கிழக்கில் பாராளுமன்றங்களை அமைத்து மாநில ஆட்சிமுறையை அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலம், இந்தநாட்டின் இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும். இது நிச்சயம் நடக்கும் என்று காலி எம். பி, கலாநிதி டபிள்யூ. தஹாநாயக்கா மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் வாலிப ஒன்றியத்தின் கருத்தரங்கில் கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

கலாநிதி தஹாநாயக்கா மேலும் கூறியதாவது:

''ஈராக்கின் வடபகுதியில் வசிக்கும் இருபது லட்சம் குர்திஷ் மக்களுக்காக அந்தநாட்டின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனியான ஒரு பாராளுமன்றத்தைக் கொடுத்திருக்கிறாரென்றால், யாழ்ப்பாண மக்களுக்காக ஏன் ஒரு பாராளுமன்றத்தை வழங்க முடியாது?

''தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கியேயாகவேண்டும் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையே இருந்துவரும் குரோதம் நீக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு
(5-ம் பக்கம் பார்க்க)

## அபாயச் சங்கு!

(கொழும்பு)
''1986-ம் ஆண்டு ஒரு இக்கட்டான ஆண்டாக இருக்கலாம். நாட்டின் ஒற்றுமைக்காக இந்த நாட்டின் இளைஞர்கள் பலர் உயிர்த்தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். தாய்மார் பலர் தமது பிள்ளைகளை இழக்க நேரிடலாம். ஆனால் இப்படியான துர்ப்பாக்கிய நிலை ஏற்படக் கூடாது என்றே விரும்புகிறோம்''.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து பாராளுமன்றத்தில் நேற்று சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் மேற்படி எச்சரிக்கையை விடுத்தார்!

# இலங்கை இனப்பிரச்னையில் அமெரிக்காவின் தலையீடு!

## வாஷிங்டனில் சுப்பிரமணியம் சுவாமி தகவல்

[வாஷிங்டன்]
''இலங்கை இனப் பிரச்னையில் அமெரிக்க அரசாங்கம் நடுநிலைமை வகிப்பதிலேயே தற்போது நாட்டம்காட்டுகின்றது. தமிழ்-சிங்கள இனங்கள் இரண்டுக்கும் ஆதரவளித்து ஒரு சமஷ்டி அமைப்பை இலங்கையில் உருவாக்கச்செய்வதிலேயே அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது'' என்று முன்னாள் இந்திய ஜனதாகட்சிப் பிரமுகரான திரு. சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மேரிலாந்து பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற இலங்கை இனப் பிரச்னை ஆய்வு குறித்த மகாநாட்டிலேயே அவர் மேற்
(5ம் பக்கம் பார்க்க)

## அரிசி ஆலை குண்டுவைத்து தகர்ப்பு!

[மட்டக்களப்பு]
ஏறாவூர் வடமேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் அரிசிஆலை கட்டிடம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. [ய-மா]

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)
யாழ். டெரியாஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தச் சேமிப்பு மிகவும் குறைவாக இருப்பதாகவும் இரத்தானம் செய்ய விரும்புகிறவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரி இரத்தவங்கிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு உதவும்படியும் கோரப்பட்டுள்ளனர்.

## மூளைக்காய்ச்சல்: 22 பேர் பலி

(கொழும்பு)
சிலாபத்தில்மூளைக்காய்ச்சல் வியாதி பீடித்த மேலும் இருவர் நேற்று மரணமானதை தொடர்ந்து இக்காய்ச்சலால் இறந்தோர்தொகை 22 ஆக அதிகரித்துள்ளது. (ய-மா]

## ''யுத்தநிழலில் பயங்கரநோய்கள்?'' சபையில் தினேஷ் கேள்வி

(கொழும்பு)
''யுத்த உபாயத்தின் அடிப்படையில் பயங்கரநோய்கள் நாட்டுக்குள் புகுத்தப்படுகின்றனவா?'' என்று மகரகம பாராளுமன்ற உறுப்பினர் திரு. தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில், சுகாதார அமைச்சுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் பேசுகையில் கேள்வி எழுப்பினார்.

அநுராதபுரம் அருகில் கண்டுள்ள பயங்கர நோயைப் பார்க்கையில் இந்த சந்தேகம்
(5-ம்பக்கம் பார்க்க)

## மா, சீனி வருகிறது

(சுண்டுக்குளி)
மா, சீனி ஆகிய உணவுப் பொருட்கள் இருகப்பல்கள் மூலம் இன்று காங்கேசன் துறை துறைமுகத்துக்கு கொண்டுவரப்படவுள்ளது.
(5-ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி
சிவா ட்றேடிங் கோ
இடமாற்றம்

கிளிநொச்சி, ஸ்டேஷன் வீதியில் இயங்கிவந்த
சிவா ட்றேடிங் கோ
வியாபார நிறுவனம் 13-12-1985 நாளை
வெள்ளிக்கிழமை தொடக்கம்
கிளிநொச்சி, கண்டி வீதியில் கந்தசுவாமி கோவில்
அண்மையாக (பழைய பஸ் நிலையம்)
இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை
வாடிக்கையாளர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும்
அன்புடன் அறிவிக்கின்றோம்.
— உரிமையாளர்.

[2308]

## உருத்திரபுரம் வீதியில் கண்ணிவெடி: ராணுவவீரர்கள் பலி! துப்பாக்கிச்சூடு!!

[நமது கிளிநொச்சி நிருபர்]
கிளிநொச்சி உருத்திரபுரம் வீதியில் 6-ம் வாய்க்காலில் இடம்பெற்ற வீதிக் கண்ணிவெடிச் சம்பவத்தில் சில இராணுவ வீரர்கள் பலியானார்கள் என்றும் சிலர் காயமடைந்ததாகவும் கவசவாகனமொன்று தடம்புரண்டுள்ளதாகவும் பற்றுமொரு பீரங்கிவண்டி குடைசாய்ந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியில் இருந்து புதன்கிழமை காலைவரை ஏனைய இராணுவத்தினர் கிளிநொச்சிக்குத் திரும்பமுடியாத நிலையில் சம்பவ இடத்திலேயே நிலைகொண்டிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியிலிருந்து பத்து கவச வாகனங்களில் சென்ற ஆயுதப்படையினர் எள்ளுக்காடு, 10ம் வாய்க்கால் முதலான இடங்களில் தேடுதல்
(5ம் பக்கம் பார்க்க)

## எதிரொலி : 5 பொதுமக்கள் பலி

(கிளிநொச்சி)
ஆறும் வாய்க்காலில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து ஐந்துபொதுமக்கள் பலியானார்கள்.

வயல்களில் வேலைசெய்துகொண்டிருந்த விவசாயிகளே இவர்களாவர்.

அ. மனோகரராசா, இரத்
(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாக25½ பரப்பு வயற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:செ.இராமலிங்கம், சட்டத்தரணி, மல்லாகம். 2269

அடைவுகடைக்கு ஏற்ற கம்பிகள் பூட்டிய கவுண்டர் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிட்டு விலை விபரம் பேசிக்கொள்ளலாம். முகவரி: வே. இராசையா, 581/1, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 2321

நல்ல நிலையிலுள்ள சொனி T. V. 20'' கலர், National வீடியோ டெக் E N 7000 விற்பனைக்கு உண்டு. விக்ரர் அன் சன்ஸ், 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2323

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள் 17-ந் திகதி, 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2324

(1) பருத்தித்துறை நெல்லண்டை உடையார் வீதியில் 20 காணிகள் மொத்தம் பரப்பு 60தும், (2) பருத்தித்துறை புலோலி மேற்கு தம்பசிட்டி வீதியில் வீடு, கிணறு, வளவு 3½ பரப்பும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியவர்: கு. கணபதிப்பிள்ளை, Attorney at Law, புலோலி மேற்கு, பருத்தித்துறை. 2293

வலம்புரி சங்கு:தெய்வீக சக்திவாய்ந்த வலம்புரிச்சங்கு, ஆலய பூசை ஆராதனைக்கும், இல்லங்களில் இலட்சுமிகடாட்சம் நிலவுவதற்கும் மாபெரும் பொக்கிசம். உடன் விற்பனைக்குண்டு: தாஸ், மாணவர் அறப்பணி நிலயம். 59, மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை. 2319

புதிய PL-4 ரக லேத் மெசின் விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 2290

## சேவை

பல்கலைக்கழக மாணவர்களே உங்கள் ஆய்வுக் கட்டுரைகளை தமிழ், ஆங்கிலத்தில், தட்டச்சுப் பொறியில் பொறித்துக் கொள்ள: நிர்வாகி - சங்கர், சாந்தி சினிமா முன்பாக, J. E. C. மேல்மாடி, யாழ்ப்பாணம். (2121)

## தேவை

கொம்போஷிங் தெரிந்தவர்கள், பிளேட்டின், சிலின்டர் மெஷின்மைன்டர்கள் தேவை. நேரில் வரவும். ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 336, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2329

தென்னந்தும்பு மெசினில் அடித்துப் பழகுபவர்கள் (ஆண்கள்) நேரில் வரவும். தும்பு தேவையானோர் நேரில் விண்ணப்பிக்கவும். வி. சோமசுந்தரம், 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2289

## மணப்பந்தல்

40 வயதுடைய படித்த விவசாயத்தையே பிரதானமாகக் கொண்ட செவ்வாய் 2ல் குற்றமுள்ள இந்து வேளாள வகுப்பைச் சேர்ந்த மணமகனுக்கு-மணமகள் தேவை. மணமகள் 35 வயதுக்குட்பட்டவராய் இருத்தல்வேண்டும். தொடர்பு விளம்பர இல. 2300, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2300

## தவறிவிட்டது

198/4-ஹில் வீதி, தெகிவளை விலாசமிட்ட அடையாள அட்டை சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு ஓட்டுமடச் சந்திக்கும் சிவப்பிரகாசம் வீதி, மதவடி ஒழுங்கைக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும்: சின்னத்துரை தர்மராஜா, 555/4, கே. கே. எஸ். றோட், மதவடி, யாழ்ப்பாணம். 2305

## கல்வி

Radio and Electronic Engineering, சனி, ஞாயிறு காலை வகுப்புக்கள். ஆண் - பெண் ஆகியஇருசாராரும்பயிலலாம். ஆரம்பம்: 14-12-85.தொடர்பு கொள்க: ரைப்பிங் பிரிவு பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 2275

WANTED

A young R. M. P. with 20 years experience seeks employment. Apply Advt. No. 2304, C/o Eelanadu, Jaffna. 2304

### நத்தார் புதுவருட

## வாழ்த்துக்கள் விற்பனைக்கு

புதுடிசைன்களில் அமைந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் சகல விதமான கலண்டர், டயறிகள் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகட்கு விசேட கழிவு வழங்கப்படும். மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;

**மக்மிலன் புத்தகசாலை,**

இல. 3. பஸ்நிலையம்,

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

2291

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் 1986 ம் வருடத்திற்கான சோலைவரி

## மதிப்பேடுகள்

1986 ஆம் வருடத்திற்கான மாநகராட்சி மன்ற சோலைவரி மதிப்பேடுகள் தற்பொழுது ஆயத்தமாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் [சோலைவரிப்பகுதியில்] அலுவலக நேரத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருப்பதாக [252 ம் அத்தியாயமான] மாநகராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் 235 [1] ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

சி. வீ. கே.சிவஞானம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-12-85. (2306)

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) வெற்றுச் சாக்கு

## கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்கு உண்டு.

**சாக்குகளின் வகைகள்:**

| | | | |
|---|---|---|---|
| அரிசிச் சாக்கு | | 67 | கிலோ |
| ,, | ,, | 50 | ,, |
| ,' | ,, | 100 | ,, |
| மா | ,, | 67 | ,, |
| சீனி | ,, | 50 | ,, |
| சீனி | பை | 50 | ,, |
| மா | ,, | 67 | ,, |

சில்லறை

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 16-12-85.

**பதில்பொதுமுகாமையாளர்,**
127. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
10-12-85. 2315

### பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ சங்கம்,பளை, அங்கத்தவர் இடாப்பினைப்

## பூர்த்தி செய்தல்

பச்சிலைப்பள்ளி ப நோ.கூ. சங்கத்தின் அங்கத்தவர் இடாப்பு 31-12-85ல் முடிவுறுத்தப்பட்டு வாக்காளர் இடாப்புதயார் செய்யப்படும். புதிதாக அங்கத்தவராகச் சேர விரும்புவோர். 31-12-85க்கு முன் 10/- ரூபா பெறுமதியான முழுப்பங்கொன்றினைச் செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம். 31-12-85க்கு பின் சேர்ந்துகொள்ளும் அங்கத்தவர் எவரும் அடுத்து வரும் காலாண்டுக்குள்பட்ட வாக்காளர் இடாப்பில் வாக்காளராகச் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். மேலும் விபரங்களுக்கு உங்கள் கிளை முகாமையாளர் அல்லது பொதுமுகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ.ச,
பளை.

9-12-85. [2307]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## COMMERCE DAY CLASS

ஆரம்பம்: 16-12-85 காலை 8 மணி
(வாரத்தில் 20 வகுப்புகளிற்கு கூடுதலான வகுப்புக்கள் நடைபெறும்)

விபரங்கட்கு:
**New Master Institute,**
BMC LANE, JAFFNA.

## தேவை

கடலுணவு பதப்படுத்தும் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை.
தகைமையுடையவர்கள் கிழமை நாட்களில் நேரில் சமுகம்தரவும்.

**சீ போன் எக்ஸ்போட் லிமிட்.,**
இல. 15, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்,
(2326)

## சத்யா றேடேஸ்

எம்மிடம் சகல விதமான சாய்ப்புச் சாமான்கள், அழகுசாதனப் பொருள்கள்,எவர்சில்வர்ச் சாமான்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**உரிமையாளர்,**
**சத்யா றேடேஸ்,**
16, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: 9-12-85 திங்கட்கிழமை வெளியான விளம்பரத்தில் சத்யா றேடேஸ் என்பதற்கு தவறுதலாக சத்தியா றேடேஸ் என பெயர் பிரசுரமாகியதற்கு வருந்துகிறோம். (2327)

## SPOKEN ENGLISH

English is caught rather than taught and the best way of learning English is to speak it.

மூன்றே மாதங்களில் ஆங்கிலத்திற் சரளமாகப் பேசக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

Commencement: 16-12-85- காலை 9-00 மணி.
Fees: Rs. 100/- (முழுப்பயிற்சிக்கும்)

பிரபல ஆங்கில விரிவுரையாளர்:
**ஆசிரியர்: கந்தையா நவரேந்திரன்**

**CANTABIA INSTITUTE**
21, MAIN STREET, JAFFNA.
PHONE: 24201

## 86 A/L Day Class

3-ம் பிரிவு
ஆரம்பம்: 16-12-85 திங்கள் காலை 11 மணி
3-ம் பிரிவு

## 86 A/L Weekend Class

ஆரம்பம்: 15-12-85 ஞாயிறு காலை 9-30 மணி

## Paper Class

1-ம் பிரிவு
ஆரம்பம்: 22-12-85 ஞாயிறு நண்பகல் 12-00 மணி

விபரங்கட்கு:
**NEW MASTER INSTITUTE**
BMC LANE, JAFFNA.

உலகச் செய்திகள்

# இஸ்ரேலிய சிறைகளில் 1300 பாலஸ்தீனர்கள் உண்ணுவிரதம்!

லண்டன், டிச-11

**இஸ்ரேலில் உள்ள சிறைக்கூடங்களிலும், இஸ்ரேலிய கட்டுப்பாட்டிலுள்ள பாலஸ்தீனப் பகுதிகளிலும் சுமார் 1,300 பாலஸ்தீன சிறைக் கைதிகள் உண்ணுவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். தம் மீதான இஸ்ரேலிய சிறைச்சாலைப் பராமரிப்புகள் தரங்கெட்டுள்ளதைக் கண்டித்தே அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.**

கடந்த ஒரு வார காலமாகடது. இந்த உண்ணுவிரதம் இடம் பெறுகின்றதெனப் பாலஸ்தீன வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். ஆயினும் இஸ்ரேலிய அதிகாரிகள் இதனை மறுத்து, கடந்த திங்கட்கிழமை முதலே இந்த உண்ணுவிரதம் இடம் பெறுவதாக அறிவித்துள்ளனர்.

பாலஸ்தீனப் பிரதேசங்களிலும், இஸ்ரேலுக்குள்ளேயும் இஸ்ரேலியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இக்கைதிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பலதரப்பட்ட காலப்பகுதிகளிலும் இவர்களது தண்டனை காணப்படுகின்றது. சித்திரவதைகளுடன் போதியளவு பராமரிப்பின்மையால் இப் பாலஸ்தீனக் கைதிகள் துன்பமடைந்து வருகின்றனர்.

உணவு, படுக்கை வசதி, மற்றும் ஏனைய பொதுசனத் தொடர்புவசதிகள் இவர்களுக்குத் தகுந்தவகையில் வழங்கப்படவில்லையென்று கூறப்பட்டது.

பாலஸ்தீனக் கைதிகள் தாம் படும் அசௌகரியங்களுக்கெதிராக உண்ணுவிரதமிருக்கஆரம்பித்துள்ளபோதிலும், இஸ்ரேலியர்கள் அவர்களது குற்றச்சாட்டுக்களை மறுத்துவருகின்றனர். இக்கைதிகளுக்கு அவசியமான வசதிகள்செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (கி)

## தமிழகத்தில் ஹர்த்தால்

சென்னை டிச. 11

தமிழக மாநிலம் முழுவதிலும் நேற்றுப் பூரண ஹர்த்தால் ஒன்றுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டது.

தமிழக அரசுடன் முரண்பட்டுள்ள பல துறைகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இந்த ஹர்த்தாலை ஒழுங்கு செய்தன.

அ. தி. மு. க. அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டமுதலாவது ஹர்த்தால்[பந்த்] இதுவெனக் கூறப்பட்டது.

இந்த ஹர்த்தாலை முன்னிட்டு தமிழக அரசு போதியளவு முன்னேற்பாடான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

அரச நிறுவனங்கள், போக்குவரத்து வாகனங்கள் என்பனவற்றைப் பாதுகாக்கும்வகையில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

குழப்பநிலையைத் தூண்டக்கூடிய பலகேடிகள் தமிழகத்தின் பல பாகங்களிலும் முன்னெச்சரிக்கையாகப் பாதுகாவலில் வைக்கப்பட்டனர்.

தி. மு. க மற்றும் எதிர்க்கட்சிகள் இந்த ஹர்த்தாலுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன. [கி]

## யாழ்.கொழும்பு சேவை தற்காலிக நிறுத்தம்!

### கொள்ளைபோன பொருட்களை ஒப்படைக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

முறிகண்டிக்கு அண்மையில் கடந்த 7ம் திகதி 'யாழ். சலாம்ஸ் ட்ரான்ஸ்போட்டுக்குச் சொந்தமான லொறியிலிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட பல லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருப்பி ஒப்படைக்குமாறு யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொள்ளை அடிக்கப்பட்டவை 33 தமிழ் முஸ்லிம் வர்த்தகர்களினதும் வெளிநாடு சென்று கஷ்டப்பட்டு உழைத்தவர்களினது பொருட்கள் என்றும், புனிதமான இயக்கங்கள் இது விஷயத்தில் தலையிட்டு கொள்ளைபோன பொருட்களை மீட்டுத்தர வேண்டுமென்றும் அவ்வொன்றியம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக யாழ்-கொழும்பு போக்குவரத்து வர்த்தக சேவையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக யாழ். முஸ்லிம்போக்குவரத்து ஒன்றியம் தெரிவித்துள்ளது. (மா)

## "நாவலர் சைவவினுவிடை பெறுமதிமிக்க பொக்கிஷம்"

(யாழ்ப்பாணம்)

"அன்பு நெறியில் வாழ்ந்து காட்டியவர் நல்லைநகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். நம் மேல் அன்பில்லாதவர்கள் மேலும் நாம் அன்புள்ளவர்களாக இருத்தல்வேண்டும்" என்பது அவர் திருவாக்கு. அன்னார் காட்டிய அன்புநெறி நின்று சைவத் திருநெறிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் நாம் தொண்டுபுரியவேண்டும். அவரது குருபூசை நினைவு எம்மை அவர் நெறியை நினைவூட்டும் ஒன்றாகும். நாவலர் பெருமானின் 'சைவ வினுவிடை' எனும் திருநூலை ஒரு பெறுமதிமிக்க பொக்கிஷமாகப் பேணவேண்டும்."

இவ்வாறு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்திய நாவலர் குருபூசை விழாவில் திரு. கா. இரகுநாதன் பேசுகையில் குறிப்பிட்டார்.

சைவ மன்றங்களும், சைவ நிறுவனங்களும், கூட்டுப் பிரார்த்தனை மன்றங்களும் ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு முடிவில் சைவ வினுவிடை நூல்களை மக்கள் முன் படிக்கவேண்டுமென்றும், நாவலர் நூலகங்களை அமைக்க வேண்டுமென்றும் அகில இலங்கைத் திருமுறை மன்றம் இவ் விழாவில் வேண்டுகோள்விடுத்தது.

இக்குருபூசை விழா நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் நாவலர்பெருமானுக்கு விசேட பூசை திருமுறை பாராயணத்துடன் மன்ற அமைப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

"ஓர் சைவன் நியமமாகக் கைக்கொண்டு ஒழுகவேண்டிய சமய ஒழுங்குகள், ஆசாரங்கள். அவற்றின்மூலம் அவன் தன்னை ஆன்மீ சீலனுக வளர்த்துக்கொள்கிருன். திருநீறு அணிந்தவனைக் கண்டதும் நமக்கு பயபக்தி உண்டாகிறது. விபூதியின் மகிமையை நம் மத்தியில் எடுத்துக்காட்டியவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். அதனை எப்படிப் பேணவேண்டுமென எடுத்துக் காட்டியவர் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் என்று தலைவர் தமது உரையில் குறிப்பட்டார். [ஐ]

## புலமைப்பரிசில் அ. இ. ரீதியில் இவர் 3ம் இடம்

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசிலுக்கான பரீட்சையில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 7 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இந்த ஏழு மாணவர்களுள் துஷ்யந்தி ஜெயரத்தினம் நல்லூர் கல்வி வட்டாரத்தில் 2 வது இடமும் அகில இலங்கை ரீதியில் 3 வது இடத்தையும் பெற்றுள்ளார். [மா]

# நெல்சன்மன்டெலா விரைவில் விடுதலை?

பிரிட்டோரியா டிச. 11

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவரான திரு. நெல்சன் மன்டெலா விரைவில் விடுதலை செய்யப்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

திருமதி வின்னி மன்டெலா கேப்டவுணில் உள்ள சிறைக்கூடத்தில் திரு. மன்டெலாவைச் சென்று பார்வையிட்டார். கடந்த வாரம் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின்பின்னர் முதல் தடவையாக திருமதி மன்டெலா இவரைப் பார்வையிட்டார்.

திரு. மன்டெலா கடந்த 20 வருடகாலமாகச் சிறைவைக்கப்பட்டுள்ளார். பல சர்வதேச அமைப்புக்களினதும்வற்புறுத்தல்கள், மற்றும் உள்நாட்டு நெருக்கடிகள் காரணமாக அவர் விரைவில் விடுதலையாகபலாம் என்று நம்சப்படுகிறது.

திருமதி மன்டெலாவிடம் அடுத்த ஆண்டு நத்தார் பண்டிகைக்கு முன்னர் திரு. மன்டெலா விடுதலை செயயப்படுவாரா? என்று கேட்கப்பட்டது. திருமதி மன்டெலா அப்படி நடக்கவேண்டுமென்றே தாம்விரும்புவதாகவும், ஆனல் இதுபற்றித் தம்மால் எதுவும் கூறமுடியாதுள்ளதென அவர் தெரிவித்தார். [கி]

## நான்கு மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் கொக்குவில் சாரதா மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதலாவது மாணவி செல்வி வி. சந்திரிகா 177 புள்ளிகளைப்பெற்று நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் 8 ம் இடத்தையும் யாழ் மாவட்ட பாடசாலைகளுள் 7 ம் இடத்தையும் நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுள் 3ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

## கிரெம்ளினில் கோபச்சேவ்

# 400 அமெரிக்க வர்த்தகப் பிரமுகர்களுக்கு விருந்துபசாரம்!

மாஸ்கோ, டிச-11

சுமார் 400 அமெரிக்க வர்த்தகப் பிரமுகர்களுக்கு சோவியத் அதிபர் திரு. மிக்கேல் கோபச்சேவ் நேற்று கிரெம்ளினில் பெரும் விருந்துபசாரமொன்றை நடத்தினுர்.

அமெரிக்க - சோவியத் வர்த்தக உறவுகளைப் புதுப்பித்து விஸ்தரிக்கும் வகையிலேயே இந்த 400 அமெரிக்க வர்த்தகப் பிரமுகர்களும் சோவியத் வந்துள்ளனர்.

ஜெனிவாவில் கோபச்சேவ்-றீகன் சந்திப்பு இவர்களின் விஜயத்துக்கு வழியமைத்தது.

திரு. கோபச்சேவ் இந்த கிரெம்ளின்விருந்துபசாரத்தில் அமெரிக்காவின் நிலையைச் சற்றுக் கடுமையாக விமர்சித்தார்.

"அமெரிக்கா சோவியத் யூனியன்மீது மேற்கொண்ட பொருளாதாரத் தடைகள், வர்த்தகப் பகிஷ்கரிப்புக்களினுலேயே அமெரிக்க - சோவியத் வர்த்தக உறவு பாதிக்கப்பட்டு வந்துள்ளது" என்று அவர் கூறினுர்.

திரு. கோபச்சேவின் இந்த கிரெம்ளின் இராப் போசனப் பேச்சை சோவியத் தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியது.

"எதிர்காலத்தில் மிக விரிவான முறையில் சோவியத்-அமெரிக்க வர்த்தக நடவடிக்கைகள் விரிவுபடுத்தப் டும்" என்று கோபச்சேவ் நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரிக்க வர்த்தகக் குழுவின் தலைவர் இதுகுறித்துக் கருத்து வெளியிடுகையில், தமது சோவியத் விஜயம் இந்நாட்டுடனுன வர்த்தகத் தொடர்பில் ஒரு புதிய ஆரம்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்ருர். (கி)

## கும்பாபிஷேகம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் ஆலய கும்பாபிஷேகம், இன்று வியாழக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது. விசேஷ பூஜை, சமயச்சொற்பொழிவு ஆகியவற்றைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதிவலம் வருவலும் இடம்பெறும். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அண்ணமார் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் தெரிவுக்கான பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. (மா)

## இளைப்பாறிய ஆசிரியை தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சித்தப் பிரமையால பீடிக்கப்பட்டுப் பயத்தினுல் எந்நேரமும் யோசித்தபடியிருந்த இளைப்பாறிய ஆசிரியை ஒருவர், மூடப்பட்ட கிணற்றில் மூடியைத் திறந்து உள்ளே குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஜெ. பவளமலர் [53 வயது] என்ற இப்பெண்ணின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் விசாரணை நடத்தினுர்.

இறந்தவர் இளைப்பாறிய

(7-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

இறைவன் கரைகாணுத சமுத்திரம். பக்தியால் ஆதரிப்பவர்களுக்குப் பனிக்கட்டி போன்ற உருவமெடுத்துக் காட்சி தருகின்றார். சூரியனைப் போல ஞானம் உதித்தெழ சரீரியான இறைவன் மீண்டும்பிரம்மம் ஆகின்றான். ரூபமும் அரூபமும் ஒன்றே.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## அமைதியின் அருமை தெரிந்த ஜனுதிபதி ஜெனரல் ஸியா

இரண்டாவது யுத்த முடிவில் ஜப்பானைப் புனரமைக்கும் பொறுப்பு ஜெனரல் மெக்காதருக்கு வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற நேசநாடுகள் அமெரிக்க தலைமையில் இந்த நியமனத்தைச் செய்தன.

அமெரிக்காவே யுத்தத்தின் பின் வெற்றிக்குப் பெரும் பங்களித்த ஜெனரல்டுவைற்ஐசன்ஹோவரை ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுத்தது.

இவ்விரு ராணுவத் தலைவர்களும் நியமனத்தாலும், தேர்தல் மூலமும் கிடைத்த பெரும் பொறுப்பை மிக வெற்றிகரமாக நிறைவேற்றியது நிகழ்கால வரலாறு.

போரில் ஒரு நாடு இன்னெரு நாட்டை அழிக்க முற்படுவதும், சண்டையில் லட்சக்கணக்கில் மக்கள் கொல்லப்படுவதும் உலக அழிவுக்கு உதவும் கொடுமைச் செயல்கள் என்று அன்றைய அமெரிக்க ஜனுதிபதி ஐசன்ஹோவர் பல தடவைகள் வற்புறுத்தி வந்தவர்.

நேச படைகளின் ராணுவத் தலைவர் மெக்காதர் போரால் நிலைகுலைந்திருந்த ஜப்பானையும் அதன் மக்களையும் மிகவும் பரிவாக நடத்தி குறுகியகாலத்தில் ஒரு சிவில் ஆட்சி அமைப்பதில் வெற்றி கண்டார்.

வெயிலில் இருந்தவருக்கே நிழலின் அருமை தெரியும். அமைதியின் அருமை போரில் நேரடியாக ஈடுபடுபவர்க்கே நன்ருகப் புரியும்.

இக்கருத்தில் பூரண நம்பிக்கை கொண்ட நாம் இன்று இலங்கை வந்திருக்கும் பாகிஸ்தான் ஜனுதிபதியை ஒரு விசேட நோக்கத்துடன் வரவேற்கின்ருேம்.

ஐந்து நாள் விஜயத்தின் போது இலங்கைத் தமிழர்கள் வாழும் வடக்கையோ கிழக்கையோ ஜனுதிபதி எட்டிப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்காதென்பது முன்னறிந்த விடயம்.

சர்வதேச பயங்கரவாதம் காரணமாக ஜனுதிபதி ஸியாவிற்குத் தேவைப்படும் பாதுகாப்பு இந்நாட்டின் தமிழ்ப் பிராந்தியங்களைப் பார்வையிடுவதற்கு எள்ளளவும் தேவையில்லை.

அவசர தேவைக்கு எங்கள் நாட்டின் ஜனுதிபதியே யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஹெலிகப்டர்மூலம் வந்திறங்குவார். தேர்தல் என்ருல் ஒரு மனிதனுக்கு ஒரு வோட் அல்லவா?

உண்மைக் காரணம்: இன்று இவ்விரு பகுதிகளும், சிறிலங்கா என்று சொல்லப்படும் இலங்கையில் ஒரு பிரதான அங்கமாகக் கணிக்கப்படுவதில்லை. கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரிகளைப் படித்தால் இது விளங்கும்.

ஜனுதிபதிகள் இருவர் காழும்பில் முதன் முதல் சந்திக்கும் நாள் உலகின் மனித உரிமைகள் தினம். திட்டமிட்டோ அல்லது தெய்வா தீனமாகவோ இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டதை நாமறியோம்; ஆனல் அது நல்ல சகுனம்.

உலகில் பல பாகங்களில் மனித உரிமைகள் பறிக்கப்பட்டு, பிரஜைகள் அடிமைகளாக, சித்திரவதைக்கும், மரணத்துக்கும் உள்ளாகின்றனர்.

பாகிஸ்தானில் ஏற்பட்ட போரிலும் குழப்பத்திலும், அந்த நாட்டின் பாதுகாப்புக்கும் சிவில் வாழ்விற்கும் பொறுப்பேற்று அமைதியை நிலைநாட்டிய ஜனுதிபதி இன்று மக்கள் ஆட்சிக்கு நாடு திரும்பவேண்டிய எத்தனங்கள் எடுக்கின்ருர்.

உள்நாட்டுப் பிரச்னைகள் என்னவானுலும், பாகிஸ்தானுக்கு ஒரு பாதுகாப்பான ஆட்சி கிடைத்ததற்கு ஸியாவின் தலைமையே பெரும் பொறுப்பென்பதை மறுக்கமுடியாது.

பாகிஸ்தானின் நட்பு நாடாகிய இலங்கை, சிறிய நாடானுலும் வரலாற்றுப் பெருமை பெற்றதை ஜனுதிபதி ஸியா தம்முடைய இன்றைய விஜயத்தில் நன்கறிவர்.

இந்தப் புகழுக்கும் பெருமைக்கும் இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடி சர்வதேச பயங்கரவாதமல்ல; தனிப்பட்ட குரோதத்தால் பிரதமர் பண்டாரநாயகா கொல்லப்பட்டதும், தமது குதிரையின் கீழ்ப்படிவின்மையால் முதற் பிரதமர் டீ. எஸ். சேனநாயக்கா இறந்ததும் தவிர எந்த ஒரு தலைவரும், பயங்கரவாதத்துக்குப் பலியாகவில்லை: ஒரு இனம் இன்னெரு இனத்துடன் போராடவில்லை.

எனவேஇங்கு நடப்பதென்ன? இந்த விஞவை ஜனுதிபதி ஜெயவர்த்தனுவும் இந்தியப் பிரதமர் ராஜீவும் வேறு விதத்தில் எழுப்பியிருக்கின்றனர்.

''பொடியன்கள் என்ன வேண்டுமாம்?'' என்று கேட்டார் ராஜீவ்; லோக் சபையின் எதிர்க்கட்சிகள் 'பொடியன்கள்' அல்ல தமிழ்ப்போராளிகள் என்று திருத்த அதனை அவர் ஒப்புக்கொண்டார்.

''தமிழர்களுக்கு என்ன வேண்டும்'' என்று ஒரு விரக்தியும் ஆத்திரமும் நிறைந்த தொனியில் கேட்டதுபோல, 'ஐலண்ட்' பத்திரிகை குறிப்பிடுகிறது.

இங்கு வாழும் தமிழருக்கோ அல்லது அவர்கள் சார்பில்போராடும் ''பொடியன்களுக்கோ'' தேவைப்படுவது ''தமிழ் மக்கள்தங்களை ஆளும் பொறுப்பு''

அதற்கொரு போர் தேவைப்பட்டது நாட்டின் சாபக்கேடு. சுதந்திர ஆட்சிகள் வளர்த்து வந்த செலவீனம் அது.

போரின் அழிவையும் அவலத்தையும் நன்குணர்ந்த பாகிஸ்தான் ஜனுதிபதி நாட்டின் நண்பன் ஆதலால் இதற்கு முடிவு கட்ட நல்ல ஆலோசனை வழங்க வேண்டும்.

ஆபத்துக்கு உதவும் நட்பே உண்மை நட்பு; ஆயுதம் உதவும் நட்பு உண்மை நட்பாகாது.

# 20-ம் நூற்ருண்டின் இணையற்ற கவிஞன்

டாக்டர் எம். அலெக்சாந்தர் லூபியான்ஸ்கி

(நேற்றைய தொடர்ச்சி)

நாமறிந்த வரையில் இந்தத் துறையில் போதிய அளவுக்கு இன்னும் ஆராய்ச்சி நடத்தப்படவில்லை. ஆயினும், பாரதியின் கவிதைகள் மக்களின் மனத்தில் மிக வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதற்கான காரணிகளையெல்லாம் நாம் கண்டறியவிரும்பினல், அவரது கவிதா உத்தி, அவரது படிமங்கள் மற்றும் அவரது கவிதை மொழி ஆகியவை பற்றிய ஆராய்ச்சியையும் புறக்கணித்துவிடக்கூடாது. சோவியத் அறிஞர்கள் விஷயத்திலும் இது முற்றிலும் பொருந்தும். மேலும் இத்தகைய ஆராய்ச்சிகள் அவர்களுக்கு மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே தோன்றக்கூடும். ஏனெனில் பாரதியின் கவிதா வாசகங்கள் தமிழ் வாசகர்களுக்கு எவ்வளவுதான் தெள்ளத் தெளிவாக இருந்த போதிலும், அது இந்தியரல்லாத வாசகர்களுக்குப் பல சிரமங்களை ஏற்படுத்தக்கூடும்; அதன்காரணமாக அந்தக் கவிஞர் வழங்கும் செய்தியை அவர்கள் புரிந்துகொள்ள வொட்டாது தடுத்துவிடவும் கூடும்.

உதாரணமாக, 'வெறி கொண்ட தாய்' என்ற பாரதியின் பாடலை நாம் பார்ப்போம். 'தேசிய கீதங்கள்' என்ற தேச பக்தப் பாடல் தொகுதியில் இடம்பெற்றுள்ள இந்தப் பாடல், இதனைத் திடீரென்று கேட்கும் அல்லது படிக்கும் ஒருவருக்கு ஒரு விசித்திரமான எண்ணத்தையே ஏற்படுத்தும், ஏனெனில் இந்தப் பாடலில் இந்தியா வெறிகொண்டு ஆடும் தாய்த் தெய்வமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மாவிலைகளைச் சூடிய அவள் கையில் ஒரு வேலைத் தாங்கிக் குதிக்கிருள்; பாடுகிருள்; ஆடுகிருள்.

பொதுவாகச் சொன்னல், இந்திய தேச பக்தர்கள் இந்தியாவைக் காளி, துர்க்கை போன்ற பெண் தெய்வத்தோடு இணைத்தே கண்டு வந்தனர் (உதாரணமாக இது அரவிந்தரின் கருத்துக்களில் ஒன்ருகும்). ஆனல் இங்கோ பண்டைக் காலச் சங்கத் தமிழ்க் கவிதையில் பிரதிபலித்துள்ள தமிழ் மரபு வழியிலேயே உருவான படிமத்தின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை நாம் காண்கிருேம், இந்தக் கவிதையில் காணும் படிமத்தை நாம் இரு விதமாக அர்த்தப்படுத்த முடியும். முதலாவதாக, நாம் இந்தத் தாய் வடிவத்தைப் பண்டைய தமிழ்த் தாய்த் தெய்வமான கொற்றவையோடு சம்பந்தப்படுத்த முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பாடல் முழுவதுமே நமக்கு சிலப்பதிகாரத்தில் வரும் சம்பவமொன்றை, அதாவது வேடர்களான எயினர் கொற்றவையை வாழ்த்திப் பாடும் பாடல்களை நினைவூட்டும். முக்கியமாக நாம் பின்வரும் வரிகளைக் கருதிப் பார்க்கவேண்டும்.

அடல் வலி எயினர் நின்
அடி தொடு கடனிது
மிடறுகு குருதிகொள்
விறல் தரு விலையே

(உனது திருவடிகளின் முன் போர்வலி மிக்க எயினர்கள் புரியும் கடமை இது. எங்கள் வெற்றிக்கு விலையாக எங்கள் தொண்டையிலிருந்து வழிந்தோடும் ரத்தத்தை ஏற்றுக் கொள்வாயாக!)

-சிலப்பதிகாரம்-வேட்டுவ வரி)

இந்த வரிகளைப் பாரதி கவிதையின் சந்தர்ப்பத்திலும் எளிதாகப் புகுத்திவிடமுடியும். தியாகம் மற்றும் பக்தியின் வலிமையை இந்த வரிகள் எவ்வளவோ தேசபக்த உணர்வோடு பிரதிபலிக்கமுடியும். பாரதி இத்தகையவார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை என்பது உண்மைதான். ஆயினும் இவை பாடலின் உள்ளடக்கத்தோடு முற்றிலும் பொருந்தியதாகத்தான் உள்ளன. மேலும் பாரதி பயன்படுத்தியுள்ளபடிமம் அவற்றை நமது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துவதோடு, இந்தப்பாடல் பற்றிய நமது அனுபவத்தையும் வலுப்படுத்திவிடுகிறது.

பண்டைய சங்க இலக்கிய மரபின் ஒளியில் இந்தபாடலை வேருெரு விதத்திலும் காணலாம். இதனை நாம் முருகவழிபாட்டோடும் சம்பந்தப்படுத்திப் பார்க்கலாம். தமிழமக்களின் மூதற்பெருந் தெய்வமாக விளங்கும் முருகன் இளமை, ஆற்றல். வலிமை, வெற்றி, காதல் ஆகியவற்றையும் உருவகப்படுத்தி நிற்கிருன். [மேலும் அவன் கொற்றவையின்புதல்வன் என்பதும் குறிப்பிடத்தக்கது.) இந்த முருக வழிபாட்டின் தனிச் சிறப்பான அம்சம் ''வெறியாடல்'' என்பதாகும். இந்த வெறியாடல் முருகனை வழிபட்டு ஆடும் வேலன் அல்லது வெறியாடும் குறமகள் ஆகியோரின் மூலம் தனியாகவோ கூட்டாகவோ நடத்தப்பெற்றது. பாரதியின் பாடலில் வர்ணிக்கப்பட்டுள்ள விசித்திரமான ஆட்டத்தை முருகனை வரவழைத்தாடும் மகளிரின் ஆட்டத்தோடு ஒப்பிட்டுக்காண்பது சரியாகவே தோன்றுகிறது. [உதாரணமாக திருமுருகாற்றுப்படை என்றபண்டைய சங்க நூலின் ஆரும் பகுதியில் இத்தகைய ஆடும் மகள் ஒருத்தியின் வருணனையைநாம் நாம் காணமுடிகிறது.] கள்ளருந்தியும் ரத்தபலி கொடுத்தும் ஆடுகின்ற இந்த வெறியாடல், முருகவழிபாட்டில் மிக முக்கியமான பகுதியாகும். கொற்றவை வழிபாட்டிலும் காணப்படும் இந்தத் தனிச் சிறப்பபன அம்சத்தை, பாரதி தமது கவிதையின் கடைசி வரியில் அப்படியே இடம்பெறச் செய்துள்ளார். அதில்,

மாரதர் கோடி வந்தாலும்
கணம்
மாய்த்துக் குருதியில்
திளைப்பாள்

என்று அவர் பாடியுள்ளதைக் காண்க.

வெறியாட்டின்போது வெறியாடும் வேலன் ஆடுகளத்துக்குள்ளேயே முருகனைக்கொண்டு வந்து, அதாவது முருகனை ''ஆற்றுப்படுத்தி'' தெய்வத்தோடு அங்கு கூடியிருப்போருக்கும் ஒவ்வொருவருக்கும் இடையே ஒரு பரவசமான ஐக்கிய பாவத்தை உருவாக்குகிருன் மேலும் முருகன் வெறியாடும் வேலனுக்குள் புகுந்து கொண்டு, அவனது வாய்மூலமாக மனித உறவுகளையும், பிற விஷயங்களையும் பற்றிய உண்மைகளைச் சபையோருக்கு எடுத்துக் கூறுவான் என்றும் நம்பப்படுகிறது. எனவேதான் பாரதி தாயை, ''உண்மை வேல்கையைப்பற்றிக்'' குதிப்பவளாக வருணிக்கிருன் விரதம், சபதம் பக்தி ஆகியவற்றைப் போற்றியும் விசுவாச காதகம் புரிபவர்களைத் தண்டித்தும் வருகின்ற தெய்வமே முருகன் என்பதையும் இங்குகுறிப்பிடுவது பொருத்தமாகும். சங்க இலக்கியமான குறுந்தொகையில் களத்துக்கு அருகேயுள்ள மரத்தில் வசித்து வரும் பண்டைத் தெய்வம் விரதங்களை முறிப்பவர்களைக்கொன்று விடுவதாக கூறுகின்றனர். எனப் பொருள்படும்வரிகள் உள்ளன [குறுந்தொகை 87, 1 - 2]

எனவே நமது ஆய்வுரையை முடிக்குமுன், முருக வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட வெறியாடலை வருணிப்பதன் மூலம் பாரதி [பாரதி முருகனைப்பற்றி நேரடியாகக் கூறவில்லையாயினும் கூட] வெற்றி, வலிமை, ஒற்றுமை, பக்தி முதலியவை பற்றிய கருத்துக்களால் தம் கவிதையை நிறைத்து விடுகிருர். இந்தக் கருத்துக்கள் பாடலில் வாசகபூர்வமாக இடம் பெறவில்லை என்பது உண்மைதான் எனி

(5-ம் பக்கம் பார்க்க)

## பிள்ளையார்கதை



இலக்கணசுந்தரி எறிந்த காப்பு கறி சமைக்கப் பயன்படும் கொவ்வையின்மேல் விழுந்திருந்தது. காப்பின் மகிமையால் கொவ்வைக் கொடி செழித்து வளர்ந்தது. உணவுக்காகக் கொவ்வை இலை கொய்யச் சென்ற ஏழைப் பெண்ணெருத்தி அதிலிருந்த காப்பை விநாயக விரதக் காப்பென்று அறிந்து அணிந்து விரதமனுட்டித்தாள். அவள் பக்திக்கிரங்கிய விநாயகர் அருளால்அரசியாகிஅரண்மனையில் வாழும் சிறப்பைப் பெற்ருள்.

விக்கிரமாதித்தனுல் துரத்தப்பட்ட இலக்கண சுந்தரி ஒருவணிகன் மனைக்குச் செல்ல அங்குள்ள நவரத்தினங்கள் எல்லாம் கல்லாய் மாற வணிகன் இலக்கணசுந்தரியைத் துரத்தினன். பின் அவள் உழவர் மனைக்குச் செல்ல அங்கும் நட்டமேற்பட்டது. இவ்வாறு பல இடங்களுக்கும் செல்ல அங்கங்கு விபரீதமான நட்டங்கள் ஏற்பட்டன.

துன்பம்வரும்போது ஒருமித்து வரும் என்பதுமட்டுமன்றிதெய்வசாபத்துக் ஆளானவன் எங்கு சென்ருலும்தப்ப முடியாது என்பதை இலக்கணசுந்தரியின் அநுபவங்கள் உணர்த்துகின்றன. இப்படித் துன்பப்படுவோர் தெய்வத்தையோ அரசையோ துன்பம் செய்வோரையோ வெறுக்காது தீவினைத் தீர்வுக்கு முயற்சிக்கவேண்டும். இவ்வுண்மையையும் பிள்ளையார் கதை போதிக்கின்றது.

—அருளாளன்

# 20-ம் நூற்றுண்டின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் இவை அதில் குடிகொண்டேயுள்ளன. பாரதி பயன்படுத்தியுள்ள படிமத்தின் மூலம் இந்தக் கருத்துக்கள் உள்ளத்தில் தூண்டப்படவே செய்கின்றன. இதனுல் இந்தக் கவிதை வரிகள் அர்த்த புஷ்டியும் உணர்ச்சியும் மிக்கனவாகமாறி விடுகின்றன. தேச விடுதலைப்போராட்டக் காலத்தில் இந்தக் கருத்துக்களே விடுதலைப் போராட்ட வீரர்களின் லட்சியங்களாக விளங்கின; வெற்றி மார்க்கத்தில்மக்களை இட்டுச் சென்ற கோஷங்களைப் போலவ விளங்கின என்பதும் சொல்லாமலே விளங்கும்.

பாரதி [தமது பல பாடல்களில் பயன்படுத்தியுள்ளதைப் போலவே] இந்தப் பாடலிலும் தாம் பயன் படுத்தியுள்ள கவிதா வடிவமானது தமிழ் மக்களுக்கு மிகவும் அருமை வாய்ந்தது என்பதை இது அவர்களது இதயங்களைப் பெரிதும் நெகிழ வைக்கும் என்பதை அவர்கள் உள்ளத்தில் தேசபக்த உணர்வை எழுப்பும் என்பதை அறிந்தே இருந்தார். எனவே பாரதியின் கவிதைப்படைப்புக்களைப் படிக்கும் போதும், அல்லது ஆராயும் போதும், பாரதி தொன்னெடுங்காலகலாசாரத்தையே எப்போதும் சேர்ந்திருந்தார் என்பதையும், அதன் மூலம் இந்தியாவின் குறிப்பாக, தமிழ் நாட்டின் வளமிக்க கடந்த காலக் கலாச்சாரமும், வளம் மிக்கதாகவும் ஒளிமிக்கதாகவும் விளங்கக் கூடிய வருங்காலக் கலாசாரமும் சந்திக்கும் சந்தி நிலையில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்தார் என்பததையும் நாம் நினைவில் நிறுத்தியாக வேண்டும்.


## முக்கிய அறிவித்தல்

### மின் விநியோகத் தடை

1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் திகதி சனிக்கிழமையும், 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் [14-12-1985, 15-12-1985) காலை 7 மணி தொடக்கம் மாலை 5மணிவரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்வதற்காக யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் அனுராதபுரத்திலிருந்து தடைசெய்யப்படவிருப்பதால் சுன்னுகம், காங்கேசன்துறை, வேலணை கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முல்லைத்தீவு. அணுக்காய் போன்ற இடங்களடங்கிய யாழ். — கிளிநொச்சிப் பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் மின் விநியோகம்தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

**மின்பொறியியலாளர்,**
யாழ். பிரதேசம்.

இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னுகம். (2332)



**உஷாமினி**
10-30, 2-30, 4-45, 6-45
COMMANDO - 2

**சரவணபவன் மினி சினிமா**
10-30, 2-30, 4-30, 7-00
A Night Mare on Elm Street
அதிபயங்கர ரகுலாசித்திரம்
(Adults only)

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30,
மோகன் - மாதவி
**நிரபராதி**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
**தனி மரம்**
13 முதல்
**JAWS-III**

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-15, 6-30
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, பாலியல் காட்சிகள், மனிதக்குரங்கின் சாகச விளையாட்டுக்கள் நிறைந்த
TARZAN THE LORD OF APES
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
யாழ். நகரில் முதன் முதலாக காண்பிக்கப்படுகிறது.


## யாருடையது

யாழ். விவேகானந்தா ரெக்ரைல்ஸைச் சேர்ந்த திரு. எம். விவேகானந்தன் என்பவர் செல்வன் ஸ்ரீஸ்கந்தராசா புவிராசா என்பவருடைய கடவுச் சீட்டினைக் கண்டுஎடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## நெருப்புத் தினம்

[யாழ்ப்பாணம்]

''ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி'' (ஈ. பி ஆர். எல். எவ்.) ''அராஜகத்துக்கு சாவுமணி. இயக்கப் படுகொலைக்கு முற்றுப்புள்ளி'' என்று சபதம் எடுத்து, இன்று நெருப்புத்தினமாகப் பிரகடனம் செய்துள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''எம்மை ஒடுக்கும் ஸ்ரீலங்கா இனவெறி ஆட்சியாளர்களுக்கு எதிரான வீரம் செறிந்த ஈழவிடுதலைப் போராட்ட வேள்வியில் ஆயிரக் கணக்கான போராளிகள் தம்மை அர்ப்பணித்தன. ''இப்போராளிகள் ஸ்ரீலங்கா அரசினுல் வெறித்தனமாக வேட்டையாடப்பட்டது ஒரு புறமிருக்க மறுபுறம் இயக்கங்களாலேயே கொன்று தீர்க்கப்பட்ட கோர நிகழ்வுகளும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

''நாம் அறிந்தவரை இவ்வாறு படுகொலை செய்யப்பட்டோரின் பட்டியலில் கடைசிப் போராளியாக தோழர் றேகன் உள்ளார். மேற்கொண்டு இப்பட்டியல் நீளக் கூடாது. இக்கோர நிகழ்வு தொடரக்கூடாது. போராட்ட வரலாற்றில் இரத்தக் கறையைப்படியவைத்த இயக்கப் படுகொலைகளுக்கு தோழர் றேகனின் படுகொலையோடு சமாதி கட்டப்பட்டாகவேண்டும். சாவுமணி அடித்தாக வேண்டும்.

இயக்கப்படுகொலை ஒருஅராஜகச் செயல். இச்செயற்பாட்டால் சகபோராளிகள் பொது மக்கள், போராட்ட ஆதரவுச் சக்திகள் மத்தியில் எழுந்த இதயக் குமுறல்களை, அவர்களின் கோபமூச்சுக்களை நெருக்புத்தினமாய் பிரகடனம் செய்கின்ருேம். [மா]

# உருத்திரபுரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டை மேற்கொண்டுவிட்டு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே கண்ணிவெடிச்சம்பவம் இடம்பெற்றது

இதைத்தொடர்ந்துபயங்கர சத்தங்களுடன் குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுகளும் கேட்டவண்ணமேஇருந்தது. இதன் காரணமாக வயலில் வேலை செய்துகொண்டிருந்த சில விவசாயிகள் படுகாயம் அடைந்தனர். 6-ம் வாய்க்கால் மக்கள் பாதுகாப்பின்றி வயல்களில் நேற்று புதன்கிழமை காலை வரை குடும்பங்களுடன்பதுங்கி இருந்தனர்.

ஜெயந்திநகர், 7ம் வாய்க்கால்மக்கள் பாதுகாப்புத்தேடி தூர இடங்களுக்கு ஓடினுர்கள் கிளிநொச்சியிலும் பெரும் பதற்றம் நிலவியது.

பெரியண்ணன் பழனிச்சாமி [வயது 48] என்பவர் வயலில் வேலை செய்துகொண்டிருக்கும்போது சூடுபட்டு படுகாயமடைந்த நிலையில் இரவுமுழுவதும் வயல்கரையில் இருந்து பின்னர் காலையில் உறவினர்களால் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இவர் பின்னர் மரணமானுர்.

ஹெலிகொப்டர் ஒன்று ஆனையிறவில் இருந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, படுகாயமடைந்த இராணுவத்தினரை ஏற்றிச்சென்றது. 20பேர் பயணம்செய்த கவசவாகனமே கண்ணிவெடி விபத்தில் சிக்கியது. மற்றுமோர் கவசவாகனம் தாளுகவே குடைசாய்ந்தது.

நேற்றுமுன்தினமிரவு 8 மணியளவில் மீண்டும் சரமாரியான குண்டுச்சத்தங்கள் கேட்டன.

கனகபுரம், கரடிப்போக்கு, திருநகர் முதலான இடங்களால் மூன்று பிரிவாக கவசவாகனங்கள் உருத்திரபுரம் புள்ளுக்காட்டுப் பகுதிக்குச் சென்று சில வீடுகளில் சோதனை மேற்கொண்டு, சில வீடுகளை சேதப்படுத்தி திரும்பியதாம்.

நேற்று புதன்கிழமை நண்பகல் கொலனி கணேசபுரப் பக்கமாக சரமாரியான குண்டுச் சத்தங்கள் கேட்டன. இதனைத் தொடர்ந்து கிளிநொச்சியில் கடைகள் பூட்டப்பட்டன. மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினுர்கள்.

## தொடர்பு துண்டிப்பு

இச் சம்பவத்தை அடுத்து உருத்திரபுரத்திற்கும் கிளிநொச்சிக்குமான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. நேற்றும் குண்டுச்சத்தங்கள் கேட்டன.

## பரந்தனில் சம்பவம் இல்லை

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பரந்தன் பகுதியில் எவ்வித குண்டுவெடிப்புச் சம்பவங்களோ கண்ணிவெடிச் சம்பவமோ இடம் பெறவில்லை.

## அரச அறிக்கை

மேற்படி கிளிநொச்சி சம்பவத்தில் 10 இராணுவத்தினர் காயப்பட்டதாகவும், இராணுவத்தினரின் பதில் தாக்குதலின்போது இரு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# எதிரொலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம், பெரியண்ணன் பழனிச்சாமி ஆகியமூவரும் அடையாளம் காணப்பட்டனர்.

பல சடலங்கள் வயல்கரைகளில் காணப்பட்டன. காயமடைந்த பலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கணேசபுரம் ஜெயந்திநகர், 6ம் வாய்க்கால் முதலான இடங்களில் ஒரே மரணஓலம் கேட்கிறது. இங்கு பதட்டம் நிலவுகிறது.

# இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டவாறு கூறினுர். திரு.சுப்பிரமணியம்சுவாமி மேலும் கூறியதாவது;

''இலங்கை இனப்பிரச்னையின் ஆரம்பகட்டத்தில் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்குப் பின்னணியாக இருந்தது. ஆனுல் அது நேரடியாகத் தலையிடவில்லை. இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பதவியிலிருந்தபோது இலங்கை விவகாரத்தில் தலையிட அமெரிக்கா அஞ்சியிருந்தது. திருமதி காந்தி ஆத்திரமடையலாம் என்று அது கருதியது. ஆனுல் இலங்கை இனப்பிரச்னை குறித்து சமரச முயற்சிகள் திம்புவில் தோல்வியடைந்ததை யடுத்து, இப்பிரச்னை ஒரு புதிய வடிவம் எடுத்துள்ளது.

''இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைபலமற்றிருப்பதை திம்பு பேச்சுக்கள் எடுத்துக் காட்டின. இதனையடுத்தே அமெரிக்கா இலங்கை விவகாரத்தில் தலையிடமுன் வந்துள்ளது.

''திரு. ராஜீவ் காந்தியின் வெளியுறவுக்கொள்கை இலங்கை இனப்பிரச்னை தொடர்பில் வலிமையற்றுள்ளது.

''இந்நிலையிலேயே அமெரிக்காவும் ஒரு நடுநிலையான போக்கை இலங்கை விவகாரத்தில் வகிக்கத் துணிந்துள்ளது. அதன் நடுநிலைக் கொள்கையானது முன்புபோல இலங்கை அரசை மட்டும் சார்ந்திராது, தமிழ்மக்களையும் ஆதரிக்கும் போக்கில் காணப்படுகிறது. இதன் மூலம் ஒரு சமஷ்டி அமைப்பை இலங்கையில் ஏற்படுத்தவே அமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்காவின் இப்போக்கை நான் இம்மகாநாட்டில் மட்டும் உடனடியாக அறிந்து கொள்ளவில்லை. கடந்த மூன்றுமாத காலமாக அமெரிக்க செனட்டர்கள், காங்கிரஸ் பிரமுகர்களுடன் சந்தித்து உரையாடியதையடுத்துப் புரிந்து கொண்டேன்'' என்ருர்.

திரு. சுப்பிரமணியசுவாமி அமெரிக்க ஹவார்ட் பல்கலைக் கழகத்தில் தற்போது ஒரு விரிவுரையாளராக கடமையாற்றுகிருர்.

அமெரிக்க வெளியுறவுசேவை நிறுவனத்தைச் சேர்ந்த திரு. மெக்டனேல்ட் ஹவார்ட் பல்கலைக்கழகம் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக மேலும் ஆழமான கருத்துக்கள் இடம் பெறக்கூடிய கருத்தரங்கொன்றை விரைவில் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் குறிப்பிட்டார். [இ-கி]

# இனப்பிரச்னை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுவருகின்ருர். இப்பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது என்று பலர் கூறுகிருர்கள். ஆனுல் நான் கூறுகிறேன்; இப்பிரச்னைக்கு நிச்சயம் தீர்வுகாணமுடியும்.

''வடக்கில் ஒன்று, கிழக்கில் ஒன்று, மற்ருெரு இடத்தில் ஒன்று என்று மூன்று பாராளுமன்றங்கள் அமைத்து ஆட்சியை நடத்த முடியாதா?

''இந்தியா மாநில ஆட்சி முறையே இங்கும் பொருந்தும் என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கருதுகிருர். அவர் ஒரு தேவபுத்திரன். நமது நாட்டிற்கு பிரிவினை ஒத்துவராது. நாம் ஒன்றிணைந்து மாநில ஆட்சி முறையை அமுலுக்கு கொண்டு வந்தால் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும்.

''யுத்தத்திற்கு நாளாந்தம் நூற்றியெழுபது லட்சம் ரூபா செலவுசெய்யப்படுகிறது. இதனுல் பொருளாதாரத்திற்கு பலத்த அடி விழுந்துள்ளது. பண்டா-செல்வா ஒப்பந்தம் எமது பிரச்னைக்கு தீர்வுகாண உதவும்'' என்று அவர் தெரிவித்தார். [இ-து[

# மா, சீனி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றின் எடை சுமார் 950 தொன் என்றும், அடுத்த வாரத்தில் இன்னுமொரு கப்பலில் அரிசி வரவுள்ளதாகவும் யாழ். உணவுத்திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

# யுத்த நிழலில்..

(1 பக்க தொடர்ச்சி)

ஏற்படுகின்றது'' என்று தெரிவித்த அவர், ''குறிப்பாக வடக்கு, கிழக்கில் எதிர்காலத்தில் இவ்வாருன நோய்கள் ஏற்படலாம். இந்த விஷயத்தில் சுகாதார அமைச்சு விழிப்பாக இருக்கவேண்டும்'' என்று அவர் கூறினுர்.

''இன்று பயங்கரநோய் அநுராதபுரம் அருகில் பரவுகிறது. யுத்த உபாயமாக இது மேற்குலகச் சக்திகளினுல் புகுத்தப் படுகின்றதோ என்ற சந்தேகம் எழுகிறது. ஆயுத வியாபாரத்தைவிட மருந்து வியாபாரம் இலாபம்போல் தெரிகிறது'' என்றும் அவர் தெரிவித்தார். (ய-பி)

# யாழ்.கோட்டை..

(1-ம் பக்கத் தொடர்ச்சு)

பெயர்கள் பின்வருமாறு: கி. பரமநாதன், போல் சின்னப்பன், யேசுதாசன், சி. துரைசாமி, க. நாகப்பா, ச. கோபாலகிருஷ்ணன், சி. முத்துலிங்கம், பொ. திருஞானசோதி. ச. கிருஷ்ணகுமார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஏழு இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (மா)

# அபயபுரம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆயுதப்படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நேரடி மோதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இருபகுதியினருக்குமிடையே நடைபெற்ற நேரடி மோதலின்போது எதுவித பாதிப்பும் நிகழவில்லை எனத் தெரியவந்துள்ளது. (ய-மா)

# ''ஒன்று சேர்ந்து போராடுவோம்''

## தமிழீழ அதிரடிப்படை கூறுகிறது

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளும் வழங்கப்படக் கூடியதான ஒரு தீர்வுக்கு இலங்கை அரசு விரைவில் உடன்படாதுபோனுல் எம்மைப்போன்ற விடுதலை அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து விடுதலைக்காகப் போராடுவதற்குத் தயாராக இருக்கிருேம்'' என்று தமிழீழ அதிரடிப்படை என்ற இயக்கம் அறிக்கையொன்றில் கூறியுள்ளது.

## தடை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ராணுவ முகாம் முன்னுலுள்ள கண்டி வீதியால் தடைசெய்யப்பட்ட வாகனப் போக்கு வரத்துச் சேவை மீண்டும் ஆரம்பமானது. (மா)


## கடைசி நேர வரிவிளம்பரம்

**காணவில்லை**

கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைச்சேர்ந்தமுத்து புஸ்பநாதனுடைய இரண்டு அடையாள அட்டை காணுமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் சொல்லப்பட்ட முகவரியில் கையளித்தால் சன்மானம் வழங்கப்படும். [2339]

# தனியார் வைத்தியக்கல்லூரி: பயிற்சி வகுப்பு ஜனவரியில் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு அமைப்பு மூலம் மருத்துவக் கல்லூரி ஒன்று வடபகுதியில் நிறைவேறுவதை யிட்டு தாம் மகிழ்ச்சியடைவ தாக பேராசிரியர் ஏ. சின்னத் தம்பி தெரிவித்துள்ளார்.

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை வளவில் கூட்டுறவு மருத் துவக்கல்லூரி மூன்று மாடிக் கட்டிடத்திக்கான அடிக்கல் நாட்டுவைபவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடை பெற்றது.

பேராசிரியர் ஏ. சின்னத் தம்பியும், பேராசிரியரும்சட்ட வைத்திய அதிகாரியுமான என். சரவணபவானந்தனும் அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

டாக்டர் கெங்காதரன் தலை மையில் நடைபெற்ற இவ்வை பவத்தில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகிகள் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் பேராசிரி யர் சின்னத்தம்பி உரை நிகழ் த்துகையிலேயே கூட்டுறவு மூலம் மருத்துவக் கல்லூரி ஒன்று வடபகுதியில் அமைக் கப்படுவதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மூளாய்கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டிடம்ஒன் றில் பயிற்சிவகுப்புகள் ஆரம்ப மாகும் என்றும், யாழ் நகரில் உள்ள கட்டிடம் ஒன்றில் இப் பொழுது மருத்துவ பயிற்சி பெற்றுவரும் சுமார் 75 மாண வர்கள் வைத்தியசாலைக் கட்டி டத்துக்கு மாற்றப்படுவார்கள என்றும் இவ்வைபவத்தில் தெரிவிக்கப்பட்டது. [மா]



(வண்ணூர்பண்ணை)

காரைநகர் பாடசாலைகளில் 1985ம் ஆண்டு 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பெற்ற மாணவ மாணவிகள் 16 பேருக்கு காரைநகர் வரிவளவு நல்லியக்க சபை பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தது.

பரிசளிப்பு வைபவம் ஒன்றில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. சண்முகராசா பரிசில் வழங்குவதை யும், உரையாற்றுவதையும், நல்லியக்கச்சபையின் செயலா ளர், கல்லூரி அதிபர் ஆகியோர் அருகில் காணப்படுவதை யும் படத்தில் காண்க. படம்-வண்-நிரு)

## நினைவில் நீங்காத கலைஞன்



கட்டைப்பிராய் வில்லுப் பாட்டுக் கலைஞர் சபா சதா சிவம் அவர்களின் புதல்வன் தான் செல்வன் சதா மணிமா றன்புலிக்குப்பிறந்தது பூனையா குமா? என்றபடி சிறுவயதி லிருந்தே மிருதங்கம், கடம், உடுக்கு வாசிக்கும் திறமை சாலியாகவும் வானொலி, ரூப வாஹினி கலைஞனாகவும் ரூப வாஹினி தயாரிப்பாளர்களால் போற்றப்பட்டவராகவும் விளங்கினர்.

சிறுவயதிலிருந்து பலதொழி ல்கள் செய்து பெற்றோரைப் பேணும் திறமையுடன் சிறி யோர் முதல் பெரியோர் வரை ஆண்கள், பெண்களுக்கெல் லாம் பலனை எதிர்பாராது பொருளுதவி செய்தும், தரு மங்கள் செய்தும் போற்றப் பட்டவரே நம் கலைஞன்.

இவருடைய வயதை ஒத்த வர்களால் மணி என்றும்- நடுத்தர வயதுடையோரார் மணிமாறன் எனவும் நண்பர் களாலும் வீட்டிலுள்ளோரா லும் செல்லமாக கண்ணன் என்றும் அழைக்கப்பட்டார். இவர் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி மாணவனாகவும் உடன் மாணவர்களுக்கு உதவி புரிபவராகவும் திகழ்ந்தார்.

நாட்டுக்கோர் நல்லவனை வீட்டுக்கோர் வீரமகனை பெற் றெடுத்து விட்டேன் இனி மேல் எனக்கென்ன குறை யென மனக்கோட்டை கட்டி ஞள் பெற்றதாய். ஆனல் பண்ணிப்பதினறு வயதிலே 18-11-85 தினம் இராணு வம் அவர் உயிரைப் பறித்து விட்டது. அன்னரின் ஆத்மா சாந்தி பெறுக.

-நண்பர்கள்

ரூபவாஹினி

மாலை
5-00 செய்திகள்:
5-05 கார்டூன்.
5-30 கார்டூன் (சிங்களம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 கல்வி நிகழ்ச்சி
7-25 'ராச கலச'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 தொலைக்காட்சி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-30 'அகட கனட' (சிங்களம்)
9-55 'உலக யுத்தம்' அங்கம் 11
10-50 ஒளிபரப்பு முடிவு

## ஜி. ஸி. ஈ. (உயர் தரம்) பரீட்சை: இந்த மாணவர்கள் 'சபாஷ்' பெறுகிறார்கள்!

(யாழ்ப்பாணம்)

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் விஞ்ஞானப்பிரிவு கணிதப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, கலைப்பிரிவு, ஆகியவற் றில் யாழ். நகரில் உள்ள பிர பல கல்லூரிகளில் முதன்மை யாக விளங்கிய மாணவர்க ளின் பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு:

### சென். பற்றிக்ஸ் கல்லூரி

விஞ்ஞானம்: ஆர். பத்ம ராஜா இரண்டு பி, ஒரு சி, ஒருஎஸ். கணிதம்: பி. ஜெ. வலன்ரையின் மூன்று ஏ, ஒரு பி. வர்த்தகம்: ஆறுமாணவர் கள் ஒரு சி, மூன்று எஸ். கலைப்பிரிவு: ஜே. சி. போல் ஞேசன் இரண்டு ஏ, ஒரு சி, ஒரு எஸ்.

### யாழ். மத்திய கல்லூரி

விஞ்ஞானம்: கே. சதீஸ் குமார் மூன்று பி, ஒரு எஸ். கணிதம்: என். சித்திரன் இரண்டு ஏ, ஒரு சி. வர்த்த கம்: டி. ரகுநாதவன் ஒரு சி, மூன்று எஸ்.

### சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

விஞ்ஞானம்: மஞ்சுளா திட வீரசிங்கம் மூன்று ஏ, ஒரு பி. கணிதம்: தயாளினி இரா சையா மூன்று சி, ஒரு எஸ். வர்த்தகம்: சௌரி கந்தையா ஒரு ஏ, மூன்று சி. கலைப் பிரிவு: தமயந்தி துரைஐயா ஒரு பி, இரண்டுசி, ஒரு எஸ்.

### யாழ். திருக்குடும்ப ஆங்கில கன்னியர் மடம்

விஞ்ஞானம்: திருமகள் குரு நாதன் இரண்டு பி, ஒரு சி, ஒரு எஸ். வர்த்தகம்: சுகந்தி யோசப் ஒரு ஏ, ஒரு பி, இர ண்டு சீ.

### யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி

விஞ்ஞானம்: சிவசங்கர் சிவ சுப்பிரமணியம் 3ஏ, பி லோக நாதன் தேவராசா 3ஏ, பி கணிதம்; குமரேசன் நாகேஸ் வரன் 2ஏ, 2பி வர்த்தகம்: சபாபதிப்பிள்ளை மைக்கல் 3பி, சி

### யாழ். இந்துக் கல்லூரி

விஞ்ஞானம்: ஏ. சசிசாந் தன் 2ஏ, பி, சி எம். எஸ். முசமட் கிஜாஸ் 2ஏ, பி, சி கணிதம்: என். கிருபாகரன், 2ஏ, 2பி வர்த்தகம்: என். ஸ்ரீரஞ்சன் பி, 3சி கலை: ஏ. ரவீந்திரன் (பார்வையற்றவர்

(7-ம் பக்கம் பார்க்க)


## உதவி ஆசிரியர் வெற்றிடம்

ஈழநாடு ஆசிரிய பீடத்தில் கடமையாற்றுவதற்கு பத்திரிகைத்துறை அனுபவம் உடையவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர் கல்வி, அனுபவம், கிராமசேவை அலுவலகரின் வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் போட்டஸ்ரற் பிரதிகளுடன் 17-12-85க்கு முன் விண்ணப்பிக்கவும். ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி,
''உதவி ஆசிரியர் வெற்றிடம்'',
ஈழநாடு, த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

(2140)

ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- அலுமினியத் தகடுகள் (10, 14, 16, 18 g)
- வெள்ளைச் சீமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- தரை வெட்டும் மெசின் (MACHINE)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவை யான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 6/75க்கு மேல்

றம்சன்ஸ்

443. பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி: 34411 — 31511

விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரேநிறுவனம்

A/L 86 மீட்டல்

புதிய வகுப்புகள்
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 14-12-85
காலை 8-00 மணி

DAY CLASSES

ஆரம்பம்: 16-12-85
காலை 8-00 மணி

முக்கிய குறிப்பு:

1. கலை, வர்த்தக பிரபல ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடத்தும் நிறுவனம்.
2, வடமாகாணத்தில் மீட்டல் வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே நடைபெறும்.

உ
சிவமயம்



ஏசியன் ஒயில் மில்

மகத்தான திறப்புவிழா

இன்று 12-12-85 வியாழன்
காலை 8-15 மணி தொடக்கம் 9-15 மணி வரையுள்ள
சுபவேளையில்
''ஏசியன் ஒயில் மில்''
என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளோம்
அவ்வமயம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
எம்மிடம்
சுத்தமான தேங்காய் எண்ணை, பிண்ணாக்கு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
தரமான கொப்பரு கொள்முதல் செய்யப்படும்.
கொப்பரு வெட்டி வறுத்து அரைத்து வடித்து தேங்காய் எண்ணையும் பிண்ணாக்கும் கொடுக்கப்படும்.

ஏசியன் ஒயில் மில்

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(2274)

# இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி- 27 (1985-12-12)
கிழமை- வியாழன்
திதி- அமாவாசை காலை 7-00ன் மேல் பிரதமை
நக்ஷத்திரம்- கேட்டை பி.ப வரை

மேடம்: கருடப் பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள். விழிப்புடன் இருக்கவும்.

இடபம்: உள்ளத்தில் உவகைக் கூத்து. உறவினர்கள் தருகை வாழ்க்கையில் உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். எதிலும் தூய்மையைக் காண விரும்புவீர்கள்.

மிதுனம்: நண்பர்களால் நஷ்டமடைய இடமுண்டு. சிலர்வாழ்க்கையில் கடன்படவும் நேரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள்.

கடகம்: உறவு முறைகள் பலப்படும், உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடை சூழ்வார்கள்.

சிங்கம்: வாழ்ச்கையில் வசதிகள் பெருகும், தன்கையே தனக்குதவியென்று செயலாற்றவும். சிறப்பான இடமாற்றமும் ஏற்படலாம்.

கன்னி: செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு கிடைக்கும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாக உண்டு. இல்லத்திலும் இனிமை தவழும்.

துலாம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் பயக்கம் ஏற்படும்: ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்சக்கூடும்.

விருச்சிகம்: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். உடல் நலமும் சிறிது பாதிக்சப்படலாம். ஆத்திர உணர்ச்சியைத் தவிர்த்துக்கொள்ளவும்.

தனுசு: தானிய விருத்திக்கு இடமுண்டு. இனபந்துக்சள் உங்களை உற்சாகப்படுத்துவார்சள். இல்லத்திலும் இனிமை தோன்றும்.

மகரம்: மோதவரும் பகை மோசடிகள் நடக்கும். சகோதர வழியால் சஞ்சலம் ஏற்படலாம். அதிக சிந்தனையைத் தவிர்க்கவும்.

கும்பம்: பொதுத் துறையில்நல்லமுன்னேற்றம் காணப்படும். இல்லம் இன்று கட்டி வெல்லம்போல் இனிக்கும். அன்னைவழி ஆதரவும் உண்டு.

மீனம்: பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும். புதிய நண்பாகளின் வரவுமுண்டு.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## ஜி. ஸி. ஈ.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

2பி' எஸ்.(கர்நாடக சங்கீதம் செய்முறைப் பரீட்சை அண்மையில் நடந்ததினுல் அதன் முடிவு தாமதமாகியுள்ளது.

**யாழ், வேம்படி மகளிர் கல்லூரி**

விஞ்ஞானம்: ஞானச்செல்வன் 2ஏ, பி. எஸ் கணிதம்: என். ஹெலன் ரேூகினி ஏ, 2பி. சி வர்த்தகம்: அமிர்தவல்லி ஏ, சி, 2எஸ்

**யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம்**

கலைம்பிரிவு: லோறின் துஷ்யந்தி ராஜசூரியர் ஏ, பி, 2சி வர்த்தகம்: பிரபாலினி சபாரத்தினம் 2ஏ, சி, எஸ்

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

என். ஜெயசக்தி ஏ, 3பி ஆர். ரஜனி ஏ, 2பி, சி கணிதம்; ரீ. ரத்திஞம்பிகை 2பி, 2சி வர்த்தகம்: எம். காஞ்சனு பி, 3சி, வி. வாருணி பி, 3சி என். ரேவதி பி, 3சி

[ஐ]

# முதல்ஆண்டு நினைவஞ்சலி

## கதிரவேலு செல்வராஜன்

(முன்னுள் ஹட்டன் ரான்ஸ்போட் ஏஜென்ஸி, கொம்பெனி லிமிட்டெட், ஹட்டன்.)

**தோற்றம்:**
**08-12-1938**

**மறைவு:**
**12-12-1984**



மாசற்ற அன்புடனும் பாசத்துடனும் எம் குடும்ப விளக்காய் திகழ்ந்து எம்மை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென மறைந்துவிட்ட அன்புத் தெய்வமே உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேூம்.

**மனைவி, பிள்ளைகள்.**

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(2298)

# 1-வதுஆண்டுநினைவஞ்சலி

## மாரியன் மகாராஜா

(முன்னைநாள் ஊழியர் யா. மா. ந. சபை)

**தாயின் மடியில்:**
**25-4-31**

**மண்ணின் மடியில்:**
**12-1-85**



சீவியத்தில் நேசித்தவர்சளை மரணத்திலும் மறவாதீர்கள் எங்கள் அன்புத் தெய்வமே! எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து இன்று ஓராண்டு ஓடி மறைந்தாலும் தங்களின் மறைவின் துயரத்தை என்றும் நினைவுகூர்ந்து வருந்துகின்றேூம். சிராத்த தினமான இன்று தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேூம்.

**மனைவி, மகள், மருமகன், உறவினர்,**

ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில்.

(2313)

## சுகாதார நிலைய கூட்டம்

[மானிப்பாய்]

சங்குவேலி ஆரம்ப சுகாதார நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வரும் 22-ம் திகதி யாழ். சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் உடுவில் பொது சௌக்கிய பரிசோதகர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## இளைப்யாறிய.,.

(3 ம் பக்க தொடர்ச்சி)

பின், எந்நேரமும் யோசித்தபடியிருந்ததாகவும் சம்பவதினம் அவரைக் காணுததினுல் பல இடங்களிலும் தேடியதாகவும் பின்னர் அவர் கிணற்றில் கிடக்கக்காணப்பட்டதாகவும் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட அவர் தனியார் மருத்துவசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [க]

## தெல்லிப்பழை ப. நோ.கூ. சங்கம் (வரையுள்ளது)

# கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 10000 வெற்றுச்சாக்குகள், பழுதடைந்த 50 வெற்று பரல் (210 லீற்றர் கொள்ளக்கூடியது) தரமான சோளம் 40000 கிலோ, கழிவுசீனி 300 கிலோ, கழிவு மா 300 கிலோ, நெத்தலித்தூள் மண்ணுடன் 100 கிலோ மற்றும் பழுதடைந்த பொருட்சளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. மேலும் விபரங்கள் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரூ.500/- வைப்புப் பணமாக தலைமைக்காரியாலத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்டம் 19-12-85ம் திகதி வியாழக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் ''வெற்றுச்சாக்கு பழுதடைந்த பொருட்சளுக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் 24-12 85ம் திகதி பி.ப. 4-00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்.**
85-12-10. 2318

## குண்டு வெடித்து படுகாயம்

[யாழ்ப்பாணம்]

மீன்வாடியில் சமையல் வேலை செய்யும் ஒருவர், குண்டுவெடிப்புக் காயங்களுக்குள்ளானர், குருநகரைச் சேர்ந்த யேசுதாஸன் செபமாலை [20 வயது] என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இரணைதீவு கடற்கரையில் இச்சம்பவம் இடம்பெற்றது, கடற்கரையில்சமையல் வேலைக்கான பொருட்கள் தேடும் பொழுது 'ரின்' ஒன்று காலில் பட்டதால். அதுவெடித்துப் படுகாயமடைந்தாரம், யாழ். ஆஸ்டத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். [மா]

## முந்திரிகை செய்கையாளருக்கு பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

முந்திரிகைச செய்கையின் தொழில் நுட்பங்களையும், இப்பயிரில் ஏற்படும் பீடைகளையும் உள்ளடக்கிய ஒரு பயிற்சி வகுப்பு நாளை 13-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படும்.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளையால் இது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.


## Science Centre
KARAVEDDY

புதிய வகுப்புக்கள்: க. பொ. த. (உயர்) 1986 Aug.
மீட்டல் வகுப்பு:
ஆரம்பம்: 14-12-1985 காலை 8-00 மணி.
விஞ்ஞான பாடங்கள் மட்டும்.

## Modern Education Centre
KARAVEDDY

புதிய வகுப்புக்கள்: ஆண்டு 4, 5, 6, 7, 8, 9.
க. பொ. த. (உயர்) 1986 Aug.
மீட்டல் வகுப்பு:
ஆரம்பம்- 14-12-1985 காலை 8-00 மணி.
கலை/வர்த்தக பாடங்கள் மட்டும். (2328)


# பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் சுந்தரராசா ரஜீவன்



புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சுந்தரராசா (கிராம சேவை அலுவலர், மண்டைதீவு) மகேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ரஜீவன் தனது 1-வது பிறந்த தினத்தை 12-12-85 வியாழக்கிழமை இன்று மிகவும் குதூகலமாக 2-ம் வட்டாரம் இல்லத்தில் கொண்டாடுகிறுர். இவரை அப்பா, அம்மா. உருத்திரபுரம் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, சித்தப்பா, மாமிமார், மாமாமார், சித்தி, மைத்துனர், மைத்துனிமார், தம்பி கவாஸ், புங்குடுதீவு மாமி, மாமா, மைத்துனர், மைத்துனிமார், அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, ஆசையம்மா, சுவிஸ்லாந்து மாமா, மாமி, சஞ்சீவன், சந்துரு, இத்தாலி குட்டி மாமா, யாழ்ப்பாணம் கோபால்மாமா, சிவசத்தி மாமி, தினேஸ், இந்துப்பிரியா மற்றும் உற்ருர், உறவினர், நண்பர்கள் ஆகியோர் பல்கலைகளும்பெற்று பல்லாண்டுகாலம்வாழ்கவெனவாழ்த்துகின்ருர்கள். (2325)


JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

## Engineering Council Examination (London)

PART-I MAY 1987

லண்டன் பொறியியல் குழுவினரால் 1987-ம் ஆண்டு வைகாசி மாதம் நடாத்தப்படும் பகுதி I பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்ய முழுநேர வகுப்புகள் தை மாதம் 8-ந் திகதி ஆரம்பமாகின்றன.

க. பொ. த. (சா) 6 பாட சித்தியும், க. பொ. த. (உ/த) 2 பாடச் சித்தியும் (Maths and Physics) உள்ள 22 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விசேஷ ஆங்கிலப் பாடமும், பொறியியல் வரைதலும், ஆய்வுக்கூட பரிசோதனைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மூன்று தவணைசளில் தலா (18 கிழமைசள்) பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும். தவணைக்கு ரூபா 1,000/- விபரங்கள் அடங்கிய கைநூலும் விண்ணப்டப் பத்திரமும் ரூபா 20/- காரியாலயத்தில் பெற்று 30-12-85க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

முகவரி:
DIRECTOR,
Jaffna College Technical Institute,
VADDUKODDAI. [2309]

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# இஸ்ரேலுடனன உறவு:

## இலங்கை விளக்கவேண்டும்! முஸ்லிம் வாலிபர் இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

'இஸ்ரேலுடன் இலங்கை அரசு கடைப்பிடித்து வரும் கொள்கை குறித்து இலங்கை மக்கள் மத்தியிலும், முஸ்லிம் உலகத்திலும் ஏற்பட்டிருக்கும் தவறான அபிப்பிராயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். குறிப்பாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல்ஹக் இங்கு விஜயம் செய்திருக்கும் இந்த நேரத்தில் சந்தேகத்தைநீக்க இதுவே நல்ல சந்தர்ப்பம்.'

இவ்வாறு முஸ்லிம் வாலிப இயக்கங்களின் சம்மேளனம் கடிதம்மூலம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு நேற்று முன்தினம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளது.

சம்மேளனத் தலைவர் ஜனாப் எம். எம். சுஹைர் மேற்படி கடிதத்தில் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ளார். (ய-பி)

## காங்கேசன்துறை சம்பவம்: மக்கள் வெளியேற்றம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபனத்தின் 'லொக்கரில்' நிறுத்தப்பட்டிருந்த 'வகன்களில்' மூன்று 'வகன்கள்' கொள்ளையிடப்பட்டன.

இச்சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 'லொக்கரில்' பாதுகாப்புப் படையினரின் பொருட்கள் ஏற்றிவந்த 'வகன்'கள் இருந்தன, மேற்படி 'வகன்'களை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் கோஷ்டி என்ஜின் சாரதியை பயமுறுத்தி அங்கிருந்து ரயில் பாதையால் 3 'வகன்'களை மாவிட்டபுரம் புகையிரத நிலையத்து அண்மையில் விட்டு உடைத்து குறிப்பிட்ட பொருள்களை ஏற்றியபின் அநாதரவாக விட்டு இளைஞர் கோஷ்டி சென்று விட்டது.

மூன்று 'வகன்களை'யும் இரவு 7 மணியளவில் வந்த இராணுவத்தினர் எடுத்து வந்து தொழிற்சாலை 'லொக்கரில்' விட்டுள்ளனர்.

'வகன்'களில் முள்ளுக் கம்பிகளும், வயர்களும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து இப்பகுதி கடைகள் மூடப்பட்டன. மினிபஸ்சேவை ஸ்தம்பிதம் அடைந்தது. தொழிற்சாலை ஊழியர்கள் பயம்கொண்டு ஓடினர்கள். சுற்றாடலில் உள்ள பெரும்பாலான குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

## யாழ். பகுதி: பென்ஷன் பெறும் இடமும் திகதியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தபாற்கந்தோர்கள் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியங்கள் இம்மாதம் 16-ம் திகதி முதல் யாழ். விளையாட்டரங்கில் கொடுக்கப்படுமென யாழ். தபால் நிலைய அதிபர் தெரிவிக்கின்றார்.

தபாலகங்களில் பணம் கொடுப்பனவு செய்யும் திகதிகளும் பின்வருமாறு:

16-ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, கைதடி.

17-ம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி, வசாவிளான், வட்டுக்கோட்டை, கொக்குவில்.

18-ம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை, புங்குடுதீவு, மானிப்பாய் ஊர்காவற்றுறை

19-ம் திகதி வியாழன் கரவெட்டி, காங்கேசன்துறை, சுழிபுரம், வல்வெட்டித்துறை.

20-ம் திகதி வெள்ளி சுன்னாகம், உரும்பிராய், கோப்பாய், உண்ணாபண்ணை.

23-ம் திகதி திங்கட்கிழமை அச்சுவேலி, அளவெட்டி, காரைநகர், வேலணை, சங்கானை.

24-ம் திகதி செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, கொடிகாமம், யாழ்ப்பாணம். (ஐ)

## 15 வயது மாணவியின் ஒரு சோகமான முடிவு

(யாழ்ப்பாணம்)

"படிப்பில் கவனம்செலுத்தவில்லை" என்று அக்கா பேசிய போது "படிப்புத்தனக்கு வரவில்லை என்ன செய்வது" என்று கவலையடைந்த தங்கை கிணற்றுச் சுவரில் தனது இறுதி விருப்பத்தை எழுதிவிட்டுக் கிணற்றில்குதித்துத்தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். செல்வியின் (15-வயது) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

அக்கா வெளியில் போனபின்னர் சிநேகிதி வீட்டிற்குப் போய்விட்டு வருவதாகச் செல்வி கூறியபோது வளர்ந்த பெண்பிள்ளைகள் அடிக்கடி வெளியில் போகக்கூடாதெனக் கூறித்தாயார் தடுத்துவிட்டதாகவும் மனக்கவலையடைந்த செல்வி இரவு சாப்பிடவில்லை என்றும் பின்னர் படுக்கையில் அவரைக்காணாது தேடிப் பார்த்தபோது கிணற்றில் சடலம் காணப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. கிணற்று உள்புறச் சுவரில் சோக்கினால் "செல்வி இன்று காலை நாலரை மணிக்கு இறந்துவிட்டார். அக்கா நிம்மதியாக வாழலாம். என் இறுதிச் சடங்கிற்கு என் சிநேகிதியையும் கூப்பிடுங்கள். குட்பை" என்று எழுதப்பட்டிருந்ததாகவும், படுக்கை அறையிலும் இதேபோன்று எழுதப்பட்டிருந்ததாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க)

## "சிவசுப்பிரமணியத்தின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பு"

(யாழ்ப்பாணம்)

"விசை இழந்த, நங்கூரம் இல்லாத நடுக்கடலில் தத்தளிக்கும் படகாகிவிட்டோம். திசைகாட்டி மறைந்து விட்டார்".

இவ்வாறு முன்னாள் நீதியரசரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தலைவருமான அமரர் வீ. சிவசுப்பிரமணியத்தின் மறைவு குறித்து யாழ். சிவானந்த குருகுல பரிபாலன சபையின் விசேட கூட்டத்தில் பேசுகையில் சபையின் உபதலைவரும் நிர்வாகஸ்தருமாகிய பிரம்மஸ்ரீ ப. சுப்ரமணியஐயர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

"சிவானந்த குருகுலத்தை ஸ்தாபித்தது முதல் இன்று வரை, அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராக இருந்து பலவிதத்திலும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து சேவை செய்தவர். எங்கள் குருகுலத்துக்கு மட்டுமல்லாது சைவத்துக்கும் தமிழ்இனத்துக்கும்வழி காட்டியாக இருந்து அளப்பரிய சேவையாற்றியுள்ளார். அவரது இழப்பு சைவ உலகுக்கே ஒரு பேரிழப்பாகும், இந்து சமய குருமார்களை சிவானந்த குருகுலம் திறமையாக சிருஷ்டிக்க வேண்டும் என்று கண்ணும் கருத்துமாக இருந்தார்" என்றார்.

அமரர் சிவசுப்பிரமணியத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து இரண்டுநிமிட மௌன அஞ்சலியை சிவானந்த குருகுல பரிபாலன சபை செலுத்தியது.

## வேலணை விபத்து மரணம்: வானுடன் சாரதியை ஆஜராகுமாறு பணிப்பு

[யாழ்ப்பாணம்]

வேலணை வங்களாவடி விபத்தில் சம்பந்தப்பட்ட வானுடன் அதன் சாரதியை, மரண விசாரணையில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டுள்ளது.

வேலணை எஸ். சிவபாதசுந்தரத்தின் [35 வயது] மரண விசாரணையின்போது மேற்கண்டவாறு யாழ். பதில் நீதவான் க. கேசவன் பணிப்பு வழங்கினார்.

இம்மாதம்6ம்தேதி வேலணை வங்களாவடி ஒழுங்கையிலிருந்து காலஞ்சென்றவர் வந்த போது புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிவான் மோதியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வானின் இலக்கம் தெரியவில்லை என்றும் சாரதியின் பெயரும் தெரியவில்லை என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வானுடன் சாரதியை ஆஜராகும்படி பணிக்கப்பட்டது. (க)

## முஸ்லிம் செய்திப்பிரிவு கொள்ளைபற்றித் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு லொறிப் போக்குவரத்துச் சேவைகள் நடைபெற மாட்டாது என்று யாழ். நகரில் ஒட்டப்பட்டுள்ள 'முஸ்லிம் செய்திப் பிரிவின்' சுவரொட்டியில் காணப்படுகிறது.

கடந்த ஏழாம் திகதி கொழும்பிலிருந்து யாழ். வர்த்தகர்களுக்கு சலாம்ஸ் ரான்ஸ்போர்ட் லொறிமூலம் எடுத்துவரப்பட்ட பலலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை முறிகண்டியில் வைத்துக் கொள்ளையடித்ததின் விளைவே இது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நவீன சந்தையின் சுவரொன்றில் காணப்படும் சுவரொட்டியில்; யார்யாரு கு பொருட்கள் லொறியில் எடுத்து வரப்பட்டன என்ற பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மொத்தமாக 32 பேர்களின் பெயர்களுடன் காணப்படும் இச்சுவரொட்டியில் 10-12-85 முதல் கொழும்பு - யாழ். லொறிச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதனைச் செய்தவர்கள் யார் என்றும் கொள்ளையரா? இயக்கமா? என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ஐ)

## கட்டாக்காலி நாய்களை ஒழித்துக்கட்டக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் பொதுமக்களைக் கடிப்பதால் ஏற்படும் உயிராபத்துக்களைத் தடுக்கும் முகமாக அந்த நாய்களை ஒழித்துக் கட்டும்படி வைத்திய அதிகாரி ஒருவர் வேண்கோள் விடுத்துள்ளார்.

வீடுகளில் கட்டி வளர்க்கும் நாய்களைக்கூட ஆரோக்கியமாக வைத்திருப்பதுடன் அவற்றிக்குத் தடுப்பூசி தவறாது போடும்படியும் அவ்வைத்திய அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் கட்டாக்காலிகளாகத்திரியும் நாய்களாலாலும், விசர்நாய்களாலும் கடியுண்டவர்களில் பலர் எதுவித சிகிச்சைகளும் மேற்கொள்ளாமல் வாளா இருந்துவிட்டு, நோய் முற்றிய பின்னர் மரணத்தை எதிர் நோக்கவேண்டிய நிலைக்காளாகின்றார்கள்.

பல கஷ்டங்களுக்கும் மத்தியில், பெரும் சிரமங்களுக்கும் மத்தியில் விசர்நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்துகளை யாழ். ஆஸ்பத்திரிக்கு வரவழைத்துள்ளார் வைத்திய அதிகாரி. ஆதலால். விசர் நாய்க்கடிக்குள்ளானவர்கள் எதுவித தாமதமுமின்றி உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் சென்று வைத்திய நிபுணருக்குக்காட்டி தடுப்பூசி மருந்து போட்டு சிகிச்சையை மேற்கொள்ளும்படி வைத்திய அதிகாரி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

### எச்சரிக்கை

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் 74 வயதுள்ள திடகாத்திரமுள்ள மூதாட்டி ஒருவர், விசர் நாயல் கடிபட்டு எதுவித சிகிச்சையும் மேற்கொள்ளாமல் ஆபத்து நிலையில் காலம் தாழ்த்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானார்.

இதுபோன்ற நிலை யாருக்கும் நிகழாமல் பார்த்துக் கொள்ளும்படி வைத்திய அதிகாரி எச்சரிக்கை செய்துள்ளார். [மா]

## மரண அறிவித்தல்

### திரு. இ. க. சுப்பையா

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திரு. இ. க. சுப்பையா 10-12-85ல் காலமானார். இவர் பரிமளகாந்தியின் அன்புக்கணவரும், யோகலட்சுமி, பாலசுப்பிரமணியம், பாலச்சந்திரன் [இலங்கை மின்சார சபை], பாலசுந்தரம் [உரிமையாளர் லட்சுமி ரேடர்ஸ் கொக்குவில்], பரமேஸ்வரன் [தேசிய வீடமைப்புத் திணைக்களம்], பரமேஸ்வரி [லண்டன்] ஆகியோரின் அன்புத்தந்தையும், நடராசா, தங்கராணி, சுவர்ணதேவி, நிர்மலா, சிவஞானம், தேவராஜன் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று 12-12-85 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

2331 தகவல்: சு. பாலச்சந்திரன்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

## இன்று

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மனிதஉரிமைகள் தினத்தையொட்டி, இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில், இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (பெடபிராந்தியம்) கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் வண பிதா ஜெயசீலன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் கு. நேசையா ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர். (மா)

## 15 தங்கப்பவுண் கொள்ளை!

(வவனியா)

செட்டிக்குளத்திலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் 15 தங்கப்பவுண் நகைகளும், 48 இந்தியச் சாரங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இனந்தெரியாத ஏழுபேர் ஆயுதமுனையில் இக்கொள்ளைச் சம்பவத்திலீடுபட்டதாகபுகார் செய்யப்பட்டுள்ளது. (ய-மா)

## ஊர்காவல்படை துப்பாக்கிப் பிரயோகம்

[வவனியா]

ஊர்காவல்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

அடம்பன் குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆண்டியா புளியங்குளத்தைச் சேர்ந்த தீர்சஹிப், கணேஷ் ஆகிய இருவருமே படுகாயமடைந்தவராவர் இவர்களிருவரும் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மா